# ஸ்ரீவசநபூஷணம்

## ப்ரதம ப்ரகரணம்

1. வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களாலே.
2. ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்தில் அர்த்தம் அறுதியிடக் கடவது; மற்றை இரண்டாலும் உத்தரபாகத்தில் அர்த்தம் அறுதியிடக் கடவது.
3. இவை இரண்டிலும் வைத்துக் கொண்டு இதிஹாஸம் ப்ரபலம்.
4. அத்தாலே அது முற்பட்டது.
5. இதிஹாஸ ஸ்ரேஷ்ட்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறை இருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூது போனவன் ஏற்றம் சொல்லுகிறது.
6. இவை இரண்டாலும் புருஷகார வைபவமும் உபாய வைபவமும் சொல்லிற்றாயிற்று.
7. புருஷகாரமாம் போது க்ருபையும் பாரதந்த்ர்யமும் அநந்யார்ஹத்வமும் வேணும்.
8. பிராட்டி முற்பட பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக.
9. ஸம்ஸ்லேஷ விஶ்லேஷங்கள் இரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்.
10. ஸம்ஸ்லேஷ தசையில் ஈஶ்வரனைத் திருத்தும்; விஶ்லேஷ தசையில் சேதனனைத் திருத்தும்.
11. இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே.
12. உபதேசத்தால் இருவருடையவும் கர்ம பாரதந்த்ர்யம் குலையும்.
13. உபதேசத்தாலே மீளாத போது சேதனனை அருளாலே திருத்தும்; ஈஶ்வரனை அழகாலே திருத்தும்.
14. அறியாத அர்த்தங்களை அடைய அறிவித்து ஆசார்ய க்ருத்யத்தையும் புருஷகார க்ருத்யத்தையும் உபாய க்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக் கொள்கையாலே மஹாபாரதத்தில் உபாய வைபவம் சொல்லிற்றாயிற்று.
15. புருஷகாரத்துக்கும் உபாயத்துக்கும் வைபவம் ஆவது தோஷத்தையும் குணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாத அளவன்றிக்கே அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சை ஆக்குகை.
16. இரண்டும் இரண்டும் குலைய வேணும் என்று இருக்கில் இரண்டுக்கும் இரண்டும் உண்டாயிற்றாம்.
17. இரண்டும் குலைந்தது என்று இருக்கில் இத்தலைக்கு இரண்டும் உண்டாயிற்றதாம்.
18. ராக்ஷஸிகள் தோஷம் ப்ரசித்தம்.
19. ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திக அக்ரேஸரனாய் 'கேஸவஸ்யாத்மா' என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாய் இருக்கிற அர்ஜுநனுக்கு தோஷம் ஏது என்னில், பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வத பீதியும்.
20. த்ரௌபதீ பரிபவம் கண்டிருந்தது க்ருஷ்ண அபிப்ராயத்தாலே ப்ரதாந தோஷம்.
21. பாண்டவர்களையும் நிரசிக்க ப்ராப்தமாய் இருக்க, வைத்தது த்ரௌபதியுடைய மங்கள ஸூத்ரத்துக்காக.
22. அர்ஜுநனுக்கு தூத்ய சாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்தி உபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக.
23. ப்ரபத்திக்கு தேஶ நியமமும் கால நியமமும் ப்ரகார நியமமும் அதிகாரி நியமமும் பல நியமமும் இல்லை.
24. விஷய நியமமே உள்ளது.
25. கர்மத்துக்கு புண்ய க்ஷேத்ரம் வஸந்தாதி காலம் ஶாஸ்த்ர உக்தங்களான தத் தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவை எல்லாம் வ்யவஸ்திதங்களாய் இருக்கும்.
26. 'ஸ ஏஷ தேஶ: கால:' என்கையாலே இதுக்கு தேஶ கால நியமம் இல்லை.
27. இவ்வர்த்தம் மந்த்ர ரத்நத்தில் ப்ரதம பதத்திலே ஸுஸ்பஷ்டம்.
28. ப்ரகார நியமம் இல்லை என்னும் இடம் எங்கும் காணலாம்.
29. த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று; அர்ஜுநன் நீசர் நடுவிலேயிறே இவ்வர்த்தம் கேட்டது.

30. ஆகையால் சுத்த்யசுத்திகள் இரண்டும் தேட வேண்டா; இருந்தபடியே அதிகாரியாம் இத்தனை.
31. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.
32. அதிகாரி நியமம் அன்றிக்கே ஒழிந்தபடி என் என்னில், தர்ம புத்ராதிகளும், த்ரௌபதியும், காகமும், காளியனும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானும், ஸ்ரீவிபீஷணாழ்வானும், பெருமாளும், இளையபெருமாளும் தொடக்கமானவர்கள் ஶரணம் புகுருகையாலே அதிகாரி நியமம் இல்லை.
33. பல நியமம் இன்றிக்கே ஒழிந்தபடி என் என்னில்; தர்ம புத்ராதிகளுக்கு பலம் ராஜ்யம்; த்ரௌபதிக்கு பலம் வஸ்த்ரம்; காகத்துக்கும் காளியனுக்கும் பலம் ப்ராணம்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு பலம் கைங்கர்யம்; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு பலம் ராம ப்ராப்தி; பெருமாளுக்கு பலம் ஸமுத்ரதரணம்; இளையபெருமாளுக்கு பலம் ராம அநுவ்ருத்தி.
34. விஷய நியமம் ஆவது குண பூர்த்தி உள்ள இடமே விஷயம் ஆகை; பூர்த்தி உள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.
35. ஆழ்வார்கள் பல இடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே.
36. 'பூர்ணம்' என்கையாலே எல்லா குணங்களும் புஷ்கலங்கள்.
37. ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப் போலே ப்ராகாசிப்பது இங்கே.
38. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக் கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிற இடம்.
39. பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வ்யூஹம்; பெருக்காறு போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.
40. இது தான் ஶாஸ்த்ரங்களால் திருத்த ஒண்ணாதே, விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய், ருசி பிறந்தால் உபாயமாய், உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாய் இருக்கும்.
41. இதில் ப்ரபத்தி பண்ணும் அதிகாரிகள் மூவர்.
42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்தி பரவசரும்.
43. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்தி பாரவஶ்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.
44. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற.
45. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றி வரும்.
46. 'என் நான் செய்கேன்' என்கிற இடத்தில் இம்மூன்றும் உண்டு.
47. அங்கொன்றைப் பற்றி இருக்கும்.
48. முக்யம் அதுவே.
49. 'அவித்யாத:' என்கிற ஶ்லோகத்திலே இம்மூன்றும் சொல்லிற்று.
50. "இதம் ஶரணமஜ்ஞாநாம்".
51. பக்தி தன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இது தான் குலையக் கடவதாய் இருக்கும்.
52. தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்.
53. இந்த ஸ்வபாவ விஶேஷங்கள் கல்யாண குணங்களிலும் திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழல் ஓசையிலும் காணலாம்.
54. இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்ரன் எழுத்து வாங்குமா போலே இருப்பதொன்று.
55. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறாதொழிகை.
56. அங்கம் தன்னை ஒழிந்தவற்றைப் பொறாதொழிகை.
57. உபாயம் தன்னைப் பொறுக்கும்.
58. உபாயாந்தரம் இரண்டையும் பொறுக்கும்.
59. இது இரண்டையும் பொறாது.
60. பலத்துக்கு ஆத்ம ஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

61. அல்லாத போது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.
62. ஆபத்தைப் போக்கிக் கொள்ளுகிறோம் என்று ப்ரமித்து அத்தை விளைத்துக் கோள்ளாது ஒழிகையே வேண்டுவது.
63. ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வ அநுமதியே.
64. எல்லா உபாயத்துக்கும் பொது ஆகையாலும், சைதந்ய கார்யம் ஆகையாலும், ப்ராப்தி தசையிலும் அநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதி ரேகி அல்லாமையாலும், அசித் வ்யாவ்ருத்த வேஷத்தை ஸாதநம் ஆக்க ஒண்ணாது.
65. அசித் வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜனம், உபாயத்தில் உபகார ஸ்ம்ருதியும், உபேயத்தில் உகப்பும்.
66. 'உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்' என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு.
67. அது தான் எப்போதும் உண்டு.
68. அது பலிப்பது இவன் நினைவு மாறினால்.
69. 'அந்திம காலத்துக்குத் தஞ்ஜம், இப்போது தஞ்ஜமென் என்கிற நினைவு குலைகை' என்று ஜீயர் அருளிச் செய்வர்.
70. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே.
71. ஸ்வயத்ந நிவ்ருத்தி பாரதந்த்ர்ய பலம்; ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி ஶேஷத்வ பலம்.
72. பர ப்ரயோஜந ப்ரவ்ருத்தி ப்ரயத்ந பலம்; தத் விஷய ப்ரீதி சைதந்ய பலம்.
73. அஹம் அர்த்தத்துக்கு ஜ்ஞாந ஆநந்தங்கள் தடஸ்தம் என்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்.
74. இது தான் வந்தேறி அன்று.
75. ஸ்வாதந்த்ர்யமும் அந்யஶேஷத்வமும் வந்தேறி.
76. ஶேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்; தச்ஶேஷத்வ விரோதி ததிதர ஶேஷத்வம்.
77. அஹங்காரம் ஆகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாத பேர் அடியான் என்றிறே.
78. க்ராம குலாதிகளால் வரும் பேர் அநர்த்த ஹேது.
79. 'ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:'.
80. உபாயத்துக்கு, பிராட்டியையும் த்ரௌபதியையும் திருக்கண்ணமங்கை ஆண்டானையும் போலே இருக்க வேணும்; உபேயத்துக்கு, இளையபெருமாளையும் பெரிய உடையாரையும் பிள்ளை திருநறையூர் அரையரையும் சிந்தயந்தியையும் போலே இருக்க வேணும்.
81. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி, ஶக்தியும் அஶக்தியும்.
82. பிராட்டி ஸ்வஶக்தியை விட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்; திருக்கண்ணமங்கை ஆண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்.
83. பசியராய் இருப்பார் அட்டசோறும் உண்ண வேணும் அடுகிறசோறும் உண்ண வேணும் என்னுமா போலே, காட்டுக்குப் போகிற போது இளையபெருமாள் பிரியில் தரியாமையை முன்னிட்டு, அடிமை செய்ய வேணும் எல்லா அடிமையும் செய்ய வேணும் ஏவிக் கொள்ளவும் வேணும் என்றார்; படை வீட்டில் புகுந்த பின்பு காட்டில் தனி இடத்தில் ஸ்வயம் பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே, ஒப்பூண் உண்ண மாட்டாதே, ஒரு திருக்கையாலே திருவெண் கொற்றக் குடையையும், ஒரு திருக்கையாலே திருவெண் சாமரத்தையும் தரித்து அடிமை செய்தார்.
84. பெரிய உடையாரும் பிள்ளை திருநறையூர் அரையரும் உடம்பை உபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையே போயிற்று.
85. உபாயத்துக்கு, ஶக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலைய வேணும்; உபேயத்துக்கு ப்ரேமமும் தன்னைப் பேணாமையும் தரியாமையும் வேணும்.
86. இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது, ராக ப்ராப்தமாய் வருவது த்யஜிக்க ஒண்ணாதிறே.
87. உபாயத்வ அநுஸந்தாநம் நிவர்த்தகம்; உபேயத்வ அநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்.
88. அப்ராப்த விஷயங்களிலே சக்தன் ஆனவன் அது லபிக்க வேணும் என்றிரா நின்றால், ப்ராப்த விஷய ப்ரவணனுக்குச் சொல்ல வேண்டாவிறே.

89. அநுஷ்ட்டானமும் அநநுஷ்ட்டானமும் உபாய கோடியில் அந்வயியாது.
90. அநந்ய உபாயத்வமும் அநந்ய உபேயத்வமும் அநந்ய தைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணா நின்றோமிறே.
91. ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாத்தாலே வருமவை எல்லாம் அடிக்கழஞ்சு பெறும்.
92. உபாய பலமாய் உபேய அந்தர்பூதமாய் இருக்குமது உபாய ப்ரதிபந்தம் ஆகாது.
93. ஸாத்ய ஸமாநம் விளம்பாஸஹம் என்றிறே ஸாதநத்துக்கு ஏற்றம்; ஸாத்ய ப்ராவண்யம் அடியாகவிறே ஸாதநத்தில் இழிகிறது.
94. இவனுக்குப் பிறக்கும் ஆத்ம குணங்கள் எல்லாவற்றுக்கும் ப்ரதாந ஹேது இந்த ப்ராவண்யம்.
95. 'மாற்பால் மனம் சுழிப்ப' 'பரமாத்மநி யோ ரக்த:' 'கண்டு கேட்டு உற்று மோந்து'.
96. ஆத்ம குணங்களில் ப்ரதாநம் ஸமமும் தமமும்.
97. இவை இரண்டும் உண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈஶ்வரன் கைபுகுரும்; 'வைகுந்த மாநகர் மற்றது கையதுவே' என்கிறபடியே ப்ராப்ய பூமி கைபுகுரும்.
98. ப்ராப்ய லாபம் ப்ராபகத்தாலே; ப்ராபக லாபம் திருமந்த்ரத்தாலே; திருமந்த்ர லாபம் ஆசார்யனாலே; ஆசார்ய லாபம் ஆத்ம குணத்தாலே.
99. இது தான் ஐஶ்வர்ய காமர்க்கும் உபாஸகர்க்கும் ப்ரபந்நர்க்கும் வேணும்.
100. மூவரிலும் வைத்துக் கொண்டு மிகவும் வேண்டுவது ப்ரபந்நனுக்கு.
101. மற்றை இருவர்க்கும் நிஷித்த விஷய நிவ்ருத்தியே அமையும்; ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்.
102. இது தான் சிலர்க்கு அழகாலே பிறக்கும்; சிலர்க்கு அருளாலே பிறக்கும்; சிலர்க்கு ஆசாரத்தாலே பிறக்கும்.
103. பிறக்கும் க்ரமம் என் என்னில்; அழகு அஜ்ஞாநத்தை விளைக்கும்; அருள் அருசியை விளைக்கும்; ஆசாரம் அச்சத்தை விளைக்கும்.
104. இவையும் ஊற்றத்தைப் பற்றச் சொல்லுகிறது.
105. அருசி பிறக்கும் போதைக்கு தோஷ தர்ஶநம் அபேக்ஷிதமாய் இருக்கும்.
106. அது ப்ரதாந ஹேது அன்று.
107. அப்ராப்ததையே ப்ரதாந ஹேது.
108. பகவத் விஷயத்தில் இழிகிறதும் குணம் கண்டு அன்று; ஸ்வரூப ப்ராப்தம் என்று.
109. இப்படி கொள்ளாத போது, குண ஹீநம் என்று நினைத்த தசையில் பகவத் விஷய ப்ரவ்ருத்தியும், தோஷ அநுஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியும் கூடாது.
110. 'கொடிய என் நெஞ்சம் அவன் என்றே கிடக்கும்' 'அடியேன் நான் பின்னும் உன் சேவடி அன்றி நயவேன்' என்னா நின்றார்களிறே.
111. குணக்ருத தாஸ்யத்திலும் காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமாந தாஸ்யமிறே ப்ரதாநம்.
112. அநஸூயைக்குப் பிராட்டி அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.
113. பகவத் விஷய ப்ரவ்ருத்தி பின்னைச் சேருமோ என்னில், அதுக்கடி ப்ராவண்யம்; அதுக்கடி ஸம்பந்தம்; அது தான் ஔபாதிகம் அன்று; ஸத்தா ப்ரயுக்தம்.
114. அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான அநுபவம் இல்லாத போது குலையும்; அது குலையாமைக்காக வருமவை எல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாய் இருக்கும்; ஆகையாலே பகவத் விஷய ப்ரவ்ருத்தி சேரும்.

**ப்ரதம ப்ரகரணம் ஸம்பூர்ணம்**